மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் வைப்பதைப் பற்றி பிறகு பரிசீலிக்கப்படும் என்ற பதில் பொருத்தமானதாக இல்லை என்று நான் கருதுகிறேன். இனிமேல் அரசாங்கத்தைப் பொறுத்தவரை எதற்கும் என்னுடைய பெயரை வைக்க வேண்டாம் என்று நான் விரும்புகிறேன்.

83—

நன்னிலம் அரசு மருத்துவமனையை மேம்படுத்துதல்.

21838–டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் பொது மருத்துவமனையில் தேவையான அடிப்படை வசதிகள், அவசர ஊர்தி (Ambulance) இல்லாதது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 40 படுக்கைகள் வசதி கொண்ட நன்னிலம் அரசு மருத்துவமனையில் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளன. அங்கு அவசர நோயாளி ஊர்தி வசதி செய்து தரப்படவில்லை.

(ஆ) 50 படுக்கைகள் வசதி கொண்ட அரசு மருத்துவமனைகளுக்கு மட்டுமே நோயாளி ஊர்தி வழங்கப்பட்டு வருகிறது. எனவே இவ்வினாவிற்கு இடமில்லை.

97—

ஜல்லி உடைக்கும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச தினக்கூலி நிர்ணயம் செய்தல்.

25754–டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஜல்லி உடைக்கும் சங்க தொழிலாளர்களுக்கும் ஒரே சீரான குறைந்த பட்ச தினக்கூலி நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?